Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

நல்லூர் ... யாழ்ப்பாண

ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஐப்பசி 01 | (17 - 10 - 1992) | சனிக்கிழமை | ஓசை 242

## ஆசிரியர் நியமனத்தில் வட-கிழக்கிற்கு பாரபட்சம்

வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆசிரியர் நியமனம்வழங்குவதில் வடக்கு-கிழக்கு மாகாணத்தவர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆசிரியர் நியமனத்தில் 89 ஆம் ஆண்டுக்கு முன் நடைபெற்ற அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே நியமனம் வழங்கப்படுகிறது. 1989 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜே வி. பி யினால் பாதிக்கப்பட்டவர்களே உள்ளனர். ஆனால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இன்று வரையும் பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. எனவே இந்தப் பாரபட்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கிற்கு மேலதிக படையணிகள் விரைவு;

# எல்லைப் பகுதிகளுக்கு விசேட பாதுகாப்பு

## தளபதிகள் மாநாட்டில் முடிவு

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்திற்கு மேலதிக படை அணிகளை அனுப்புவதென கொழும்பில் இடம் பெற்ற இராணுவத் தளபதிகளின் அவசர மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும இப்படை அணிகள் கிழக்கு மாகாண எல்லையோரக் கிராமங்களில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் பொலநறுவை மாவட்டத்தில் இடம் பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து அவசர அவசரமாக இடம் பெற்ற பாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

இவ்வாறு அனுப்பப்படும் படையணிகள் எல்லைப்புற கிராமங்களைப் பாதுகாப்பதில் ஈடுபடுத்தப்பட்வுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் கொல்லப்பட்டவர்களின் தொகை குறித்து முரண்பட்ட தகவல்கள் வெளிவந்தவண்ணமுள்ளன. கொல்லப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கை 145 என இராணுவத்தரப்பு கூறுகின்ற அதே வேளை பொலிஸ் தரப்பு 161 பேர் எனவும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் 174 பேர்

(4-ம் பக்கம் பார்க்க)

### இரு மாகாணசபை; ஒரு பிராந்திய சபை

## இனப்பிரச்சினை தீர்வுத்திட்டம்; தமிழ்க்குழுக்களிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தமிழ்க்குழுக்களின்பரிசீலனைக்காக வேலைத்திட்ட ஆவணம் ஒன்று கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வேலைத்திட்டத்தின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும் தனித்தனி மாகாண சபைகளாக இயங்கும். அதேநேரத்தில், இரண்டு சபை உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பிராந்திய சபை ஒன்றும் நிறுவப்படும் என்றும் தெரியவருகின்றது.

மாகாண சபை ஒவ்வொன்றும் நிறைவேற்று மந்திரி ஒருவரின் கீழ் மந்திரி சபையைக் கொண்டிருக்கும்.

இந்த இரு சபைகளின் மந்திரி சபையும் ஒன்று சேர்ந்து பிராந்திய சபையின் மந்திரி சபையாக முதல் அமைச்சர் ஒருவரின் கீழ் செயற்படும்.

பிராந்திய சபையின் முதல் அமைச்சர் ஏதாவதொரு மாகாண சபையின் நிறைவேற்று மந்திரியாக முதல் வருடம் பதவி வகிப்பார். இதே வேளை மற்ற மாகாணசபையின் நிறைவேற்று மந்திரி உப முதல்வராகப் பதவி வகிப்பார். இருவரின் பதவிக்காலமும் தலா ஒரு வருடமாகவே இருக்கும்.

ஒரு வருடம் கழிந்ததும் உப முதல்வராக இருந்தவர் முதல் அமைச்சராவார். மற்றவர் உப முதலமைச்சராவார் இவ்வாறு பதவிகள் இருவருக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்புநிதி சேகரிப்பு நாளை முற்பகல் 9 30 மணி முதல் 12.30 மணிவரை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்புநிதி சேகரிப்பு பிற்பகல் 2-00 மணி முதல் 5-00 மணி வரை பண்ணாகம் வடக்கம்பரை மெய்கண்டான் பாடசாலையிலும் இடம் பெறும் என தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

## மண்டைதீவு ராணுவம் துப்பாக்கிச் சூடு

(குருநகர்)

மண்டை தீவு சிறிலங்கா இராணுவக் காவலரணில் இருந்து நேற்று முன் தினம் இரவு 8 மணியளவிலும், நேற்று அதிகாலை 5 மணியளவிலும் யாழ். கரையோரப் பகுதிகளை இலக்கு வைத்துத் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன,

துப்பாக்கி வேட்டுகளை அடுத்து கடலில் தொழிலில் ஈடுபட்டு நின்ற மீனவர்கள் கரைக்கு வந்தனர். பண்ணை வீதியில் இரவு இராணுவத்தினர் வந்து நின்று சுட்டதாக

## யுத்தத்தை உடன் நிறுத்தி பிரச்சினைக்கு தீர்வுகாண்க

### தென்மாகாணசபை எதிர்க்கட்சிகள் மறியல்

[மாத்தறை]

வடக்கு-கிழக்கு யுத்தத்தை உடனடியாக நிறுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கை என்று பல்வேறு கோரிக்கைகளையும் இவர்கள் முன்வைத்தனர்.

தென் மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர் டி.வைதுடாவை தலைமையில் மாகாணசபை எதிர்க்கட்சியினரும், பல்வேறு இடதுசாரி அமைப்புக்களும் இந்த மறியல் போராட்டத்தை நடத்தின.

## கோரிக்கையை ஏற்காவிடின் பதவியை ராஜினாமா செய்க

### முஸ்லிம் எம். பி. களிடம் வேண்டுகோள்

[கொழும்பு]

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் தமது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கோரியுள்ளார். பிரேமதாசா

ஆயுதபாணிகளான முஸ்லிம் ஊர்காவற் படையை உருவாக்கும் படி முஸ்லிம் காங்கிரஸ் மீளவும் அரசை கேட்டிருப்பதோடு பொலநறுவைச் சம்பவங்கள் அரசு முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறிவிட்டது என்பதை வெளிப்படுத்துவதாகவும் முஸ்லிம்காங்கிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசினால் முஸ்லிம் சமுதாயத்துக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என்பதை அரசு மீண்டும், மீண்டும் காட்டியிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் முகமெட் அஷ்

[4-ம் பக்கம் பார்க்க]

ந்த புதன்கிழமை கையளிக்கப் பட்டுள்ளதாகக் கொழும்பில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வேலைத்திட்டத்தின் படி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும் தனித் தனி மாகாண சபைகளாக இயங்கும். அதேநேரத்தில், இரண்டு சபை உறுப்பினர்

ரும் நிறைவேற்று மந்திரி ஒருவரின் கீழ் மந்திரி சபையைக் கொண்டிருக்கும்.

இந்த இரு சபைகளின் மந்திரி சபையும் ஒன்று சேர்ந்து பிராந்திய சபையின் மந்திரி சபையாக முதல் அமைச்சர் ஒருவரின் கீழ் செயற்படும்.

பிராந்திய சபையின் முதல் அமைச்சர் ஏதாவதொரு

முதல்வராகப் பதவி வகிப் பார். இருவரின் பதவிக்காலமும் தலா ஒரு வருடமாகவே இருக்கும்.

ஒரு வருடம் கழிந்ததும் உப முதல்வராக இருந்தவர் முதல் அமைச்சராவார். மற்றவர் உப முதலமைச்சராவார் இவ்வாறு பதவிகள் இருவருக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முதல் 5-00 மணி வரை பண்ணாகம் வடக்கம்பரை மெய் கண்டான் பாடசாலையிலும் இடம் பெறும் என தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

## மண்டைதீவு ராணுவம் துப்பாக்கிச் சூடு

(குருநகர்)

மண்டை தீவு சிறிலங்கா இராணுவக் காவலரணில் இருந்து நேற்று முன் தினம் இரவு 8 மணியளவிலும், நேற்று அதிகாலை 5 மணியளவிலும் யாழ். கரையோரப் பகுதிகளை இலக்கு வைத்துத் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப் பட்டன,

துப்பாக்கி வேட்டுகளை அடுத்து கடலில் தொழிலில் ஈடுபட்டு நின்ற மீனவர்கள் கரைக்கு வந்தனர். பண்ணை வீதியில் இரவு இராணுவத்தினர் வந்து நின்று சுட்டதாகவும் அவர்கள் கூறினர். (21)

பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து அவசர அவசரமாக இடம் பெற்ற பாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

கிராமங்களைப் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டவுள்ளனர்.

இதேவேளை நேற்று முன் தினம் கொல்லப்பட்டவர்களின் தொகை குறித்து முரண்பட்ட தகவல்கள் வெளிவந்த

வத்தரப்பு கூறுகின்ற அதே வேளை பொலிஸ் தரப்பு 161 பேர் எனவும், முஸ்லிம் காங்கிரஸ் சட்சியினர் 174 பேர்

(4-ம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை உடன் நிறுத்தி பிரச்சினைக்கு தீர்வுகாண்க

## தென்மாகாணசபை எதிர்க்கட்சிகள் மறியல்

[மாத்தறை]

வடக்கு - கிழக்கு யுத்தத்தை உடனடியாக நிறுத்தி இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தென்மாகாண சபையின் எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் மாத்தறையில் மறியல் போராட்டம் செய்தனர்.

அவசரகாலச் சட்டத்தை நீக்கவேண்டும், வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளையும் இவர்கள் முன்வைத்தனர்.

தென் மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர் டி.வை துடாவை தலைமையில் மாகாணசபை எதிர்க்கட்சியினரும், பல்வேறு இடதுசாரி அமைப்புக்களும் இந்த மறியல் போராட்டத்தை நடத்தின.

## மனைப் பொருளியல் க.பொ.த. (உ/த) பரீட்சை

(யாழ்ப்பாணம்)

க.பொ த உயர்தரப் பரீட்சைக்கு இம்முறை தோற்றிய மாணவர்களுக்கான மனைப் பொருளியல் பரீட்சை இம் முறையும் யாழ் மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

க. பொ. த. (உ/த) 1992 ஆகஸ்ட் பரீட்சைக்கு தோற்றியோருக்கு மனைப்பொருளியல் பரீட்சை இம்மாதம்28-ம் திகதி முதல் முதலாம் திகதி வரை யாழ். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது. இதற்குதோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்,

இதேவேளைவெளிமாவட்ட

(4-ம் பக்கம் பார்க்கவும்)

## பனம்சீனி, வெல்லம் உற்பத்தி; உடன் ஈடுபட வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது ஏற்பட்டுள்ள சீனித் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு உடனடியாக பனம் சீனி, வெல்லம் என்பவற்றை உற்பத்தி செய்யுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றிய பகுதியினர் உற்பத்தியாளர்களைக்கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது குறித்து வெளியிடப் பட்டுள்ள செய்தியில் இன்றைய போராட்ட காலத்தில் மக்கள் பல வழிகளிலும் பொருளாதார பழுவைச் சுமந்து நிற்கின்றனர். இவ் வேளையில் தற்பொழுது ஏற்பட்டுள்ளபோக்குவரத்துதடை காரணமாக சீனிக்கு தட்டுப்பாடு உருவாகியுள்ளது.

இந்நிலையில் பனஞ்சீனியை உற்பத்தி செய்து மக்கள் தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்யுமாறு வட மாகாணத்திலுள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்களையும் பனை அபிவிருத்தி சபையினரையும் மற்றும் தனிநபர் பதனீர் உற்பத்தியாளர்களையும்கேட்டுக்கொண்டுள்ளனர்.

அத்துடன் இந் நிறுவனங்களிடமுள்ள பனம் பாணியை

(4-ம் பக்கம் பார்க்கவும்)

## தெரிவுக் குழு 28இல் கூடும்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து வரும் பாராளுமன்றத் தெரிவுக் குழு கடந்த புதன்கிழமை கூடி அதிகாரப் பகிர்வின் அலகு பற்றி ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

தெரிவுக்குழு மீண்டும் இம் மாதம் 28 ஆம் திகதி கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'புலிகளைதேடியோர்' பொலிசாரால் கைது

மலையகத் தோட்டப் பகுதியில் இருக்கும் தொழிலாளர் குடியிருப்புகளான லயன்களில் புலிகளை தேடுகிறோம் என்ற போர்வையில் கொள்ளையில் ஈடுபட்ட ஒரு கோஷ்டியினர் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரவளைப் பகுதியில் கைதுசெய்யப்பட்ட இக்கோஷ்டியினரிடமிருந்து சுழல் துப பாக்கி, இராணுவச் சீருடைகள், போலி இராணுவ அடையாள அட்டைகள் என்பன பொலிசாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

## வட-கிழக்கு மாகாணத்தில் அதிபர் பதவி உயர்வுப் பரீட்சை வெட்டுப்புள்ளியைகுறைக்குக

வடக்கு கிழக்கு மாகாணம் கடந்த பத்து ஆண்டுகளாக யுத்தப் பிரதேசமாக இருந்து வருகிறது. எனவே முதலாம் இரண்டாம் தர அதிபர் பதவி உயர்வுக்கான போட்டிப்பரீட்சையில் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்குத் தனியான வெட்டுப்புள்ளியைநிர்ணயிக்கவேண்

(4-ம் பக்கம் பார்க்க)

## முன்னோடிப் பரீட்சை

யாழ். மாவட்ட க. பொ. த. சாதாரணதர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை இம்மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளைச் சகல பாடசாலை அதிபர்களும் தத்தமது கோட்டக் கல்வி நிலையங்களில் எதிர் வரும் 20ஆம் திகதி பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

# பிராந்தியபடைதளபதிகளுக்கு விசேட அதிகாரங்கள்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப்பகுதிகளில் யுத்தத்தை தொடர்ந்து நடத்தி வரும் தளபதிகள் அவ்வப் பிரதேசத்திற்கும், இடத்திற்கும் ஏற்ற வகையில் திட்டமிட்டுச் செயற்படலாம் என்று கூட்டுப்படை தளபதி அனுமதி அளித்துள்ளார். இத் தகவலை இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், பிரதேசத்திற்கும், இடத்திற்கும் ஏற்ற வகையில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் திட்டமிட்டிருப்பதாகவும் எனினும் முப்படைத்தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைகளை பிரதேசத் தளபதிகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வணசிங்க உத்தரவு இட்டிருப்பதாகவும்

(4-ம் பக்கம் பார்க்க)

# கோரிக்கையை ஏற்காவிடின் பதவியை ராஜினாமா செய்க

## முஸ்லிம் எம்.பி.களிடம் வேண்டுகோள்

[கொழும்பு]

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் தமது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கோரியுள்ளார். பிரேமதாசா அரசு தமது கோரிக்கைகளுக்கு இணங்காவிட்டால் முஸ்லிம் உறுப்பினர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில்சுமார்20 முஸ்லிம் உறுப்பினர்கள் உள்ளார்கள். இவர்களில் நான்கு பேர் மட்டுமே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுதபாணிகளான முஸ்லிம் ஊர்காவற் படையை உருவாக்கும் படி முஸ்லிம் காங்கிரஸ் மீளவும் அரசை கேட்டிருப்பதோடு பொலநறுவைச் சம்பவங்கள் அரசு முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறிவிட்டது என்பதை வெளிப்படுத்துவதாகவும் முஸ்லிம்காங்கிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசினால் முஸ்லிம் சமுதாயத்துக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என்பதை அரசு மீண்டும், மீண்டும் காட்டியிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் முகமெட் அஷ்

[4-ம் பக்கம் பார்க்க]

## பள்ளிவாசல்களை சூழ படையினர் குவிப்பு

பொலநறுவைத் தாக்குதல்களைத் தொடர்ந்து கொழும்பிலும் பிரதான நகரங்களிலும் பள்ளிவாசல்களில் அரசுப் படைகள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. நேற்று வெள்ளிக்கிழமை முஸ்லிம்கள் தொழுகைக்காகப் பள்ளிவாசலில் கூடியபோதே ஆயுதந் தாங்கிய படையினர் பள்ளிவாசல்களைச் சுற்றிக் காவல் புரிந்தனர்.

பள்ளிவாசல்களுக்கு வெளியே வன்முறை ஆர்ப்பாட்டங்களைத் தடுக்கவும், தமிழர்களும், முஸ்லிம்களும் கலந்து வாழும் பகுதிகளில் தமிழர் மீது பழிவாங்கும் தாக்குதல்கள் நடப்பதைத் தடுக்கவும் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களும், தமிழர்களும் கலந்து வாழுப பகுதிகளில் பெருமளவிலான துருப்புக்கள் நடமாட்டம்காணப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புலிகளால் அரசாங்கம் நிராயுதபாணி ஆகுகிறது

- பண்ருட்டி

(சென்னை)

இலங்கையில் தமிழர்களை நிராயுத பாணிகளாக்க சிறிலங்கா முனைந்து நிற்கிறது. ஆனால் தமிழர்கள் தான் சிறிலங்காப் படையினரை நிராயுதபாணிகளாக்கி வருகின்றனர் என்று பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்தவரும், சட்ட சபை உறுப்பினருமான பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இலங்கையில் தமிழர்கள் இப்போது தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளக் கூடிய நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# பொலநறுவை சம்பவத்திற்கு அரசே பொறுப்பு ஏற்க வேண்டும்

## - அபுகலாம்

பொலநறுவைத் தாக்குதல்களுக்கு அரசின் போக்கே காரணம் எனக் கொழும்பில் முஸ்லிம் தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அரசு முஸ்லிம்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கத் தவறியதால் பொலநறுவைச் சம்பவத்துக்கு அரசேபொறுப் பேற்க வேண்டும் என்று சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான அபு கலாம் கூறியுள்ளார்.

முஸ்லிம் கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் சிறிலங்கா இராணுவத்தில் தனிப்பட்ட முஸ்லிம் படைப் பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என அவர் யுறுத்தினார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## பொலநறுவைச் சம்பவம் ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

பொலநறுவையில் மூன்று முஸ்லிம் கிராமங்கள் தாக்கப்பட்டது தொடர்பாக விசாரிக்கவென தனிநபர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கு முன்னால் கடற் படைத் தளபதி அட்மிரல் எச். எஸ். சில்வா நியமிக்கப் பட்டுள்ளார்.

காடுகள் படைப்போம்
கருமுகில் காண்போம்

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### விற்பனைக்கு

நல்லின ஜிப்சன் புறாக்கள் விற்பனைக்குண்டு (கறுப்பு ஜிப்சன், பிறவுண் ஜிப்சன்) ந. வரதராசா முருகமூர்த்தி கோயிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சி-5228)

நல்ல நிலையில் உள்ள சொகுசான வில்தகுடன் கூடிய வண்டில் கூடாரத்துடன் விற்பனைக்கு உண்டு. ந வரதராசா முருகமூர்த்தி கோயிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சி-5229)

### சோதிடம்

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, உங்கள் எதிர்காலப்பலனறிய வேலணை சோதிடர் V. A. சிவராசா 152 B, அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (8481)

### பற்சிகிச்சை

பற் சிகிச்சை நிலையம் (கொக்குவில் - இந்துக் கல்லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ். வீதி, கொக்குவில் பா. நே. தினசரி பி. ப 4 00 - பி. ப. 6.00 மணி வரை ஞாயிறு மு. ப, 10.00 - பி. ப. 2.00 மணி வரை. [சி-3211]

ooooooooooooooooooooooo

### சப். இன்ஸ்பெக்டர் உட்பட ஐவர் கைது

(கொழும்பு)

கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்பு லிபர்டி பிளாசாவில் உள்ள கடை ஒன்றில் பத்து இலட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது சம்பந்தமாக றிசேவ் சப் இன்ஸ்பெக்டர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விளக்கு வெடித்து

## அறிவித்தல்

### முந்திரிகைப்பழ விநியோகஸ்தர் சந்திப்பு

திக்கம் வடிசாலைக்கு முந்திரிகைப் பழம் வழங்கும் உற்பத்தியாளர்களுடனான சந்திப்பு எதிர்வரும் 19 - 10 - 1992 திங்கள் காலை 10 00 மணிக்கு வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், மேற்படி விநியோகஸ்தர்கள் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
வடமாகாண த. ப. பொ கூ. ச சமாசம்
499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

( சி/ 5233 )

யாழ்ப்பாண பல்கலைக்கழக

## வெளிவாரி பட்டப்படிப்புகள்

★ கலைமுதற்தேர்வு (G. A. Q )
★ வணிகமுதற்தேர்வு (FIRST in Com.)
★ பொதுக்கலைத்தேர்வு [B A. PART I]
★ வணிகமாணித்தேர்வு[B.Com PART -I]

ஆகிய கற்கைநெறிகள் தொடர்பான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

பொருளியல்

**S. வரதராஜன்** (B.A. Hons)

ஆரம்பம்

**18-10-92 ஞாயிறு**

G. A. Q; 1st in Com. ஞாயிறு 4.15 P. M.
B. A. PART - I; B. Com PART - I ஞாயிறு 10.00 A.M.

**பாரதிதாசன் கல்வி நிறுவனம் [BECON]**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-5203)

## மூவாண்டு நினைவஞ்சலி



அமரர் வைத்தியகலாநிதி

## ஜே. பி. சி. பிலிப்ஸ் ஞாபகார்த்தசபை அமைத்தல்

யாழ்ப்பாணத்தின் பிரபல வைத்தியரும் சமூகசேவையாளருமான கலாநிதி ஜே. பி. சி. பிலிப்ஸ் அவர்களை நினைவுகூரும் விதத்தில் ஞாபகார்த்த சபை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை (18-10-92) ஞாயிறு காலை 10 00 மணிக்கு யாழ். புனித பத்திரிசியார் தொழில் நுட்ப நிறுவன மண்டபத்தில் நடைபெறும்.

தயவுசெய்து அவரது நண்பர்கள், கூடநின்று பணியாற்றிய பெரியார்கள் அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ் புனிதவளன் விளையாட்டுக்கழகம்
குருநகர்

விளம்பர அன்பளிப்பு ;
பிரபல கண்ணாடி விநியோகஸ்தர்
பி. ஐ. பெர்னாண்டோ
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி-5231)

## பிறந்த நாள் வாழ்த்து




### செல்வி கனிஸ்ரா

அரியாலை நாவலடியைச் சேர்ந்த இராசேந்திரன் ஜனதா தம்பதிகளின் அருந்தவப்புதல்வி செல்வி கனிஸ்ரா தனது முதலாவது பிறந்த தினத்தை 17-10-1992 இன்று சனிக்கிழமை வெகு விமர்சையாக தனதில்லத்தில் கொண்டாடுகிறார்.

கனிஸ்ராவை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், அன்ரார்மார், அண்ணாமார், அக்காமார், அத்தான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் இறைவன் அருள் பெற்று சகல கலைகளும் கற்று நீடூழி காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகம்
21. 07. 1969
விண்ணகம்
09. 10. 1990
திதி 17.10.1992

### வேலுப்பிள்ளை இரவீந்திரராசன்

(முன்னாள் கிளி. இந்து உயிரியல் பிரிவு மாணவன்)

அன்பினில் விளைந்த செல்வமகனே- உன்
பிரிவு எமை அதிர வைக்குதடா
காலம் இரண்டு சென்றாலும்- நீ
வளர்த்துவிட்ட கற்பனைகள் கண்முன் நிற்குதடா
ஓவியங்கள் சமைத்து உயர்ந்த மகனே- உனை
ஓவியமாக்கிக யார் என்ன வரைந்தனர்

உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, சகோதரர்கள்,
உறவினர்கள்

D 5,
கிளிநொச்சி

(3341)

## நினைவு கூருகின்றோம்...

### 1992-10-17

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் தம்பிலுவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின் போது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**நந்தன்** (செ. குலசிங்கம் - காரைதீவு, யாழ் )

சண்டிலிப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் கனகசபை** (ஆறுமுகம் பாக்கியராசா - சங்கானை மேற்கு சித்தன்கேணி, யாழ் )

கல்லுண்டாய் வெளியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**தென்றல்/கோணேஸ்** (வல்லிபுரம் கணேஸ்வரன்- மாவிட்டபுரம், யாழ்.)

மல்லாகம், கோப்பாய்ப் பகுதிகளில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 2-தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**சசி** (பொ. சசிகரன் - பெரியகல்லாறு மட்டக்களப்பு)

மூதூர்ப்பகுதியில், இந்தியப்படையினர் பதுங்கிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**டானியல்** (இராசநாயகம் கௌரிகாந்தன் - காரைதீவு - 02 அம்பாறை)

சித்தன்கேணி இலுப்பையடிப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய

(கொக்குவில் - இந்துக் கல்லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ். வீதி, கொக்குவில் பா. நே. தினசரி பி. ப 4 00 - பி. ப. 6.00 மணி வரை ஞாயிறு மு. ப, 10.00 - பி. ப. 2.00 மணி வரை. [சி-3211]

ooooooooooooooooooooooo

## சப். இன்ஸ்பெக்டர் உட்பட ஐவர் கைது

(கொழும்பு)

கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்பு லிபர்டி பிளாசாவில் உள்ள கடை ஒன்றில் பத்து இலட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது சம்பந்தமாக றிசேவ் சப் இன்ஸ்பெக்டர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## விளக்கு வெடித்து நால்வர் காயம்

(மன்னார்)

குப்பி விளக்கு வெடித்ததினால் ஏற்பட்ட தீவிபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் பலத்த எரிகாயங்களுக்குட்பட்டிருக்கின்றனர்.

மடு அகதிமுகாமில் கடந்த வாரம் இச்சம்பவம் இடம் பெற்றது. இச்சம்பவத்தில் சூ. செபமாலை (வயது 44) செ. சிவமாலை (வயது 36) செ. பிராஸ்க்கா (வயது 12) செ. பத்தியா (வயது 8) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

## மனையியல் வினாத்தாள்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்கான ஜீ.சீ.ஈ (உயர்தரப் பரீட்சை)யின் மனையியல் செயன் முறைப் பரீட்சைக்கான வினாத்தாள்களும் அனுமதி அட்டைகளும் யாழ். கல்வி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இந்தப் பரீட்சைக்கான திகதியை கல்விப்பணிப்பாளர் விரைவில் அறிவிப்பார். [42]

## கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3-00 மணிக்கு 33, பருத்தித்துறை வீதியில் உள்ள சம்மேளனப் பணிமனையில் தலைவர் திரு. இ. தவகோபால் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் சம்மேளனம் நடத்தும் அதிர்ஷ்டலாபச்சீட்டு விநியோகம், பேச்சுப்போட்டி, பரிசளிப்புவிழா பற்றி ஆராயப்பட உள்ளது. (24)


பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
[BECON]
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-5203)


## மூவாண்டு நினைவஞ்சலி



## செல்வி கலாரேகா கதிர்காமத்தம்பி

தாய் மடியில் 14. 05. 1974 — இறை அடியில் 20- 10 1989

3வது திதி நாள்: 17 10- 1992

மகளே! உன்பிரிவு, மண்ணில் மூவாண்டை
நகர்த்தி, விரைவாய் நீள்கிறது கண்ணே!

முன்னைநாம் செய்தவம், மண்ணிலோருருவாய்
உன்னரும் வரவில், ஒளியாய்க் கண்டோம்!
பத்தோடு ஐந்திற் பருவந் தூவிய,
பத்தரை மாற்றுப் பசும்பொன் னானது!
பண்பின் சிகரமாய்ப் பாசத்தின் பிறப்பாய்,
எண்ணருங் கனவுகளை எமக்கீந்து நின்றாய்!
அந்தோ! கொடுவினை அந்தகன் வரவால்,
உந்தன் ஊன்பொதி யுடல்பறி போனதே!
நீயில்லா எம்மனையும் நீரில்லாப் பாலைபோற்
காய்ந்து கருகிக் குறிகிப் போனதே!
எங்கினி ஆறுவோம்? ஏதுவழி காண்போம்?
சங்கரன் துணையன்றித் தேற்றுவார் யாருளர்?
என்றாலும் வாழ்கிறாய் எம்மோடு நினைவில்;
மன்றாடுங் கூத்தன் அருளால்,
என்றும் நினைப்போம் எம்மகளே, யுன்னையே!

'அன்னை இல்லம்' — குடும்பத்தினர்
குரும்பசிட்டி, தெல்லிப்பழை. (3469)

ஆக்கம்: 'அநுமித்திரன்'



## செல்வி கனிஸ்ரா

அரியாலை நாவலடியைச் சேர்ந்த இராசேந்திரன் ஜனதா தம்பதிகளின் அருந்தவப்புதல்வி செல்வி கனிஸ்ரா தனது முதலாவது பிறந்த தினத்தை 17-10-1992 இன்று சனிக்கிழமை வெகு விமர்சையாக தனதில்லத்தில் கொண்டாடுகிறார்.

கனிஸ்ராவை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், அன்ராமார், அண்ணாமார், அக்காமார், அத்தான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் இறைவன் அருள் பெற்று சகல கலைகளும் கற்று நீடூழி காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

[சி- 5236]

## 5-ம் ஆண்டு வீர அஞ்சலி



## கப்டன் கனகசபை

[ஆறுமுகம் பாக்கியராஜா]

வீரஜனனம் 21-01-1968 — வீரச்சாவு 17-10-1987

ஓ பாக்கியே!
தலைவரின் வேண்டுகோளுக்கு
செவி சாய்த்தாயோ - எமது கனவு
நிறைவேற முன் வீரச்சாவடைந்தாயோ -
ஈழத்தின் மண்ணுக்காய் மக்களுக்காய்
எதிர்கால செல்வங்களுக்காக - எமது
இறுதி இலட்சியத்திற்காக - உன்னை
அர்ப்பணித்தாயோ -- விடோம்
தொடர்வோம் உன்பாதையை -- உன்
இலட்சியம் நிறைவேறும் நாள்
வெகுதூரமில்லை

கனகசபை வீதி, சித்தன்கேணி. (3470) — குடும்பத்தினர் நண்பர்கள்

வெய்திய -

**நந்தன்** (செ. குலசிங்கம் - காரைதீவு, யாழ்)
சண்டிலிப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் கனகசபை** (ஆறுமுகம் பாக்கியராசா - சங்கானை மேற்கு சித்தன்கேணி, யாழ்)
கல்லுண்டாய் வெளியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**தென்றல்/கோணேஸ்** (வல்லிபுரம் கணேஸ்வரன் - மாவிட்டபுரம், யாழ்.)
மல்லாகம், கோப்பாய்ப் பகுதிகளில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 2-தமிழர்கள்
1988ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**சசி** (பொ. சசிகரன் - பெரியகல்லாறு மட்டக்களப்பு)
மூதூர்ப்பகுதியில், இந்தியப்படையினர் பதுங்கிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**டானியல்** (இராசநாயகம் கௌரிகாந்தன் - காரைதீவு - 02 அம்பாறை)
சித்தன்கேணி இலுப்பையடிப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய

**லெப். அருண்/பிறேம்** (நடராசா பிறேமச்சந்திரன் - சங்குவேலி, மானிப்பாய், யாழ்)
அம்பாறை, மங்கள ஓயாப்பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 - சிறுவர்கள் உட்பட 5 தமிழர்கள்

இளவாலையில் சிற்றூர்தி ஒன்றில் வைத்து
இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்டு
இராணுவ முகாமில் கொலைசெய்யப்பட்ட
மாரீசன்கூடலைச் சேர்ந்த தமிழ் இளைஞன்
1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவுப் பகுதியில்
சிறிலங்காப்படையினர் புதைத்து வைத்திருந்த
மிதிவெடிகளை அகற்றும்போது மிதிவெடி வெடித்ததில்
வீரச்சாவெய்திய

**பானு** (அருளம்பலம் ரவிச்சந்திரன் - கருநாட்டுக்கேணி முல்லைத்தீவு)
வசாவிளான் பகுதியில் சிறிலங்காப் படையினரின் 'ஒப்பரேசன் ஜெயசக்தி' நடவடிக்கையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

**விக்ரர்** (கமலமுத்து பத்மநாதன் - உடப்பு, புத்தளம்)

**லெப். ராசிக்** (சிறிபாலசுப்பிரமணியம் அன்பழகன் - நெல்லண்டை, பருத்தித்துறை, யாழ்)

**லெப். செல்வம்** (சிவப்பிரகாசம் ரமேஸ்குமார் - பண்டாரியம்மன் கோயிலடி பருத்தித்துறை, யாழ்)

**2 ஆம லெப். ஐயர்** (பாலசுப்பிரமணியசர்மா சுந்தரராஜசர்மா - புத்தூர் மேற்கு, யாழ்)

**செல்டன்** (யேசுதாஸ் அன்ரனியுனைட் - நாவாந்துறை, யாழ்)

**நசார்** (விஜயரட்ணம் சுதாகரன் - சுதாகரன் வீதி பெரியவிளான், இளவாலை, யாழ்)

**லெப் டானியல்** (கிருஷ்ணபிள்ளை நகுலேஸ்வரன் - மூளாய் மேற்கு, சுழிபுரம் - யாழ்)

பலாலி முகாமிலிருந்து சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட
எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றும்
படுகாயமுற்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு
சாவெய்திய 2-தமிழர்கள்

வவுனியாவில்சிறிலங்காப்படையினரால் கைதுசெய்யப்பட்டு
முகாமில் வைத்து அடித்துக்கொல்லப்பட்ட
வவுனியா கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த
தமிழ் இளைஞன்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5230)

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

நீரின்மேல் வைக்கோல் தவறுகள் மிதந்துசெல்லும் போல்
முத்துக்களை நாடுவோர் நீருச்கடியே மூழ்கித் துருவ வேண்டும்
— ஜான்ட்ரைடன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 17-10 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## நரித்தனம்

இன பிரச்சினைக்கு இணக்கமான உகந்த தீர்வொன்றைக் காணும் முகமாக தமிழ்க்குழுக்களின் பரிசீலனைக்காக வேலைத்திட்ட ஆவணமொன்று' கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது இதன் பிரகாரம் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இரண்டும் தனித்தனி மாகாண சபைகளாக இயங்கும். அதேவேளை, இரண்டு சபை உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பிராந்திய சபை ஒன்றும் நிறுவப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாகாண சபை ஒவ்வொன்றும், நிறைவேற்று மந்திரி ஒருவரின் கீழ் மந்திரி சபையைக் கொண்டிருக்கும். இந்த இரு சபைகளின் மந்திரி சபையும் ஒன்றுசேர்ந்து பிராந்திய சபையின் மந்திரி சபையாக முதலமைச்சர் ஒருவரின் கீழ் செயற்படும் பிராந்திய சபையின் முதல் அமைச்சர் ஏதாவது ஒரு மாகாண சபையின் நிறைவேற்று மந்திரியாக முதல் வருடம் பதவி வகிப்பார். இதே வேளை மற்ற மாகாண சபையின் நிறைவேற்று மந்திரி உப முதல்வராகப் பதவி வகிப்பார். இருவரின் பதவிக் காலமும் தலா ஒருவருடம் இருக்கும். ஒருவருடம் முடிந்ததும் உப முதல்வராக இருந்தவர் முதலமைச்சராவார் மற்றவர் (முதலமைச்சராகஇருந்தவர்) உப முதலமைச்சராவார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவென தமிழ்க்குழுக்களிடம் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட இத் தீர்வுத்திட்டதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? அவர்கள் ஏற்றுக்கொண்டாலும் எந்தளவிற்கு இது நடைமுறைச் சாத்தியமானது என்பவையெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். ஏனெனில் இவைதற் பொழுதுபயனற்றவை.

ஆனால், இத்திட்டத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள விடயங்களைப் பார்க்கும் போது இதைத் தயாரித்தவர்கள் சிங்களப் பேரினவாதத்தின் சிந்தனையில் இருந்து இம்மியளவும் விடுபடவில்லை என்பதை மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

சிறிலங்காவின் அரசியல் அமைப்பு வரையப்பட்ட போது, பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்களவர் ஒருவர் ஜனாதிபதியாத தெரிவாகும் வேளையில், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் ஒருவர் உப ஜனாதிபதியாக வருவதற்கு வாய்ப்பு ஏற்படும் வகையில் அரசியல் அமைப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என

# காலாவதியான நிலையில் இந்திய-சிறிலங்கா உடன்பாடு

## இந்தியத்தரப்பும் ஏற்றுக்கொள்கிறதாம்

நடந்துமுடிந்த சம்பவங்களால் 1987 - ல் இந்திய இலங்கை உடன்பாடு காலாவதியாகிவிட்டது என்ற சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தற்போது இந்தியத் தரப்பும் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றது என்று தெரிய வருகிறது.

அண்மையில் புதுடில்லிக்கு விஜயம் செய்த சிறிலங்கா ஜனாதிபதியுடனான பேச்சுக்களில் இந்தியக் குடியரசுத்தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா 1987ஆம்ஆண்டின் இந்திய இலங்கை உடன்படிக்கை பற்றி குறிப்பிட்டாராயினும் பிரதமர் நரசிம்மராவ் அதை மீளமைப்பது பற்றி எந்த அக்கறையும் காட்டவில்லைஎன்று அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரேமதாசாவின் விஜயத்தின் இறுதியில் கைச்சாத்தான கூட்டறிக்கையில் சிறிலங்கா அரசாங்கத்தின்நிலைப்பாடு நடைமுறைச் சாத்தியமானது என்ற வகையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் கூட விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் மக்களின்பிரதிநிதிகள் என்று சிறிலங்கா அரசாங்கம் கருதக்கூடாது என்பதில் புதுடில்லி தீவிர அக்கறை காட்டியதாகவும் தெரிகிறது.

உடன்பாடு தற்போதுஇருப்பதாகக் கொள்ளப்பட்டாலும் கூட தமிழ் மாகாணத்திற்கான அதிகாரப் பரவலாக்கலை அது பெற்றுத் தரவில்லை என்றும் இனப்பிரச்சினை பற்றி இந்தியா வெளியிடும் அறிக்கைகள் இப்போது சம்பிரதாய பூர்வமானவையாக மாறிவருவதாகவும் இந்தியாவின் முன்னணிப் பத்திரிகையாளர்களில் ஒருவரான ராம் கூறியுள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளோடு சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தை எதையும் நடத்தக் கூடாது என்றும் இனப்பிரச்சினை பற்றி ஜனநாயகக் குழுக்களுடன் இணக்கத்திற்கு வரவேண்டும் என்றும் பிரேமதாசாவிற்கு புதுடில்லியில் ஆலோசனை கூறப்பட்டதாகவும் நம்பகரமாகத் தெரிய வருகிறது.

# நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சிங்கப்பூரில் தவிப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைஎதிர்பார்த்து சிங்கப்பூருக்கு செல்வோர் பலர் முகவர்களால் கைவிடப்பட்ட நிலையில் அங்கு தவிப்பதாக தெரிய வருகிறது. இவர்கள் சிங்கப்பூரில்உள்ள சிறிலங்கா தூதரகத்திற்கு சென்று முறையீடு செய்வதாய் தொழில் அமைச்சின் செயலாளரை மேற்கோள்காட்டி 'லங்கா தீப' செய்திவெளியிட்டுள்ளது.

பல நூற்றுக்கணக்கானோர் இப்படி அனாதரவாகி நிற்கின்றனர். சிறிலங்கா தூதரகத்தைப் பொறுத்தவரை இவர்களைக் கையாள்வது பெரும் பிரச்சினையாய் உள்ளது. ஆனால் இவர்களை சிங்கப்பூருக்கு அனுப்பிய வேலை வாய்ப்பு முகவர்கள் மீது பொலிசார் நடவடிக்கை எடுப்பர் எனவும் ஏற்கனவே இவ்வாறான இரண்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் மீது விசாரணை நடாத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிங்கப்பூர், தாய்வான், யப்பான், மலேசியா ஆகிய நாடுகளில் சிறிலங்காவைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் எதுவும் இல்லையெனவும் தொழில் அமைச்சின் செயலாளர் ஜெபசிங்க மேலும் தெரிவித்தார்.

துறைமுக ஊழியருக்கு

## வாழ்க்கை செலவுபடிவழங்க அரசு பின்னடிப்பு

(கொழும்பு)

துறைமுகங்கள் அதிகார சபை ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவு படி வழங்கும் பட்சத்தில் ஏனைய அரசு கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவுப்படி கொடுக்கவேண்டும் அதனால், துறைமுகங்கள் அதிகாரசபை, அதன் ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி வழங்குவதை அரசு விரும்பவில்லை என்று நிதி அமைச்சின் செயலாளர் எஸ். பாஸ்கரலிங்கம் கூறினார்

துறைமுகங்கள் அதிகார சபை ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுபடி வழங்குவது தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளருடன் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இலங்கை வர்த்தக, கைத்தொழில் பொதுத்தொழிலாளர் சங்கம் (சீ எம் யூ) பொதுச் செயலாளர் பாலா தம்புவின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று இதனைத் தெரிவிக்கின்றது.

வாழ்க்கைச் செலவுப் படி வழங்குவது அரச தொழில் அமைப்பின் நிதி நிலை மற்றும் அரசின் கொள்கையிலும் தங்கியுள்ளது என்றும் நிதி அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் தெரிவித்துள்ளார்.

அடுத்த தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்துதொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் கூடி முடிவெடுக்கவுள்ளனர்

# கணித விஞ்ஞான ஆசிரியர் சேவைக் கால பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புக்களில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப்பயிற்சிகள் இந்த வாரத்தில் நடை பெறவுள்ளன.

கணித பாடத்திற்கான சேவைக்காலப் பயிற்சிகள் பதினேழாம் திகதி யாழ். கோப்பாய் மகாவித்தியாலயத்திலும், இருபத்து நான்காம் திகதி யாழ் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. அதேபோல் விஞ்ஞான பாடத்திற்கான சேவைக்கால பயிற்சிகள் பதினெட்டாம் திகதி யாழ். இராமநாதன் கல்லூரியிலும், இருபத்து மூன்றாம் திகதி கோப்பாய் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன, காலை எட்டுமுப்பது மணி தொடக்கம் பிற்பகல் நான்கு முப்பது மணிவரை இப்பயிற்சி வகுப்புக்கள் நீடிக்கும்.

இதில் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் பயிற்சிகளின் போது அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பராய் வசாவிளான், கொத்தணிகளுக்கு உட்பட்ட பாடசாலை ஆசிரியர்களும், இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் பயிற்சிகளின் போது நவாலி, மானிப்பாய், உடுவில், சுன்னாகம், ஏழாலை கொத்தணிகளுக்கு உட்பட்ட பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஆசைப்பிள்ளைகுளம் திருத்தப்பட்டது

மாங்குளம் ''கல்மடுவார்'' பகுதியில் அமைந்துள்ள ஆசைப்பிள்ளை குளம் நீண்டகாலமாக பழுதடைந்து இருந்தது. இதனை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர் போருட் நிறுவனத்தின் ஆதரவுடன் புனரமைத்துள்ளனர்.

இக்குளத்தின் கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பு 89ஏக்கர் ஆகும், இவற்றில் 13 ஏக்கர் நிலம் 92/93 கால போக செய்கைக்காக 13 விவசாயிகளுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது.

இக் குள புனரமைப்பு வேலைகளை அப்பகுதி விவசாயிகளும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினரும் இணைந்து சிரமதான அடிப்படையில் மேற்கொண்டனர்.

## "வெளிச்சம்" வந்துள்ளது

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தால்வெளியிடப்பட்டு வரும்'வெளிச்சம்' இதழின் புரட்டாதி, ஐப்பசி (1992) இதழ் வெளிவந்துள்ளது முதலாண்டு நிறைவுச் சிறப்பிதழான இந்த இதழ், சிறுகதைச் சிறப்பிதழாகவெளிவந்துள்ளது. இந்த இதழில், வல்வையூரான், கே. எஸ். ஆனந்தன், கருணாகரன், முத்துவிஜயராகவன், செம்பியன் செல்வன், கி. சிவஞானம் ஆகியோரின் சிறுகதைகளும், சு. மகேந்திரன் மொழிபெயர்த்த சிஙமொழிச் சிறுகதை ஒன்றும் புதுவை இரத்தினதுரை, யோகரத்தினம் யோகி திருமாறன், வவுனியா திலீபன் ஆகியோரின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. பாவரசனின் போராட்ட நிகழ்வுச்சித்திரமும், சொக்கனின் முத்தமிழ் விழா மலர் விமர்சனமும், குழந்தை ம சண்முகலிங்கத்தின் நாடகம் பற்றிய கட்டுரையும் இன்னும் பல விடயங்களும் இந்தச் சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன.

## ரெயில்வே ஓய்வூதியம்

இலங்கை வங்கி யாழ்ப்பாணம் 2-ம் கிளையில் (ஸ்ரான்லி வீதி) புகையிரத திணைக்கள ஓய்வூதியக்காரர்களுக்கான கொடுப்பனவு திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

## கதை - கண்ணீர் கவிதைநூல்வெளியீடு

கவிஞர் நாவண்ணனின் கதை கண்ணீர் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் கம்பன் தமிழ்க் கோட்டத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில்கவிஞர் சோ பத்மநாதன், கலாநிதி காரை. சுந்தரம்பிள்ளை, அருட்திரு செல்வரட்ணம் ஆகியோர் நூலின் ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

# அமைச்சர் சங்கர் ஆனந் ராஜினாமா செய்யலாம்

இந்தியாவில் நடந்து வரும் ... தின் பேரில் 100 மில்லியன்

# வருடம் பத்தாயிரம் பேர்

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவென தமிழ்க் குழுக்களிடம் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட இத் தீர்வுத்திட்டதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? அவர்கள் ஏற்றுக்கொண்டாலும் எந்தளவிற்கு இது நடைமுறைச் சாத்தியமானது என்பவையெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். ஏனெனில் இவைதற் பொழுதுபயனற்றவை.

ஆனால், இத்திட்டத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள விடயங்களைப் பார்க்கும் போது இதைத் தயாரித்தவர்கள் சிங்களப் பேரினவாதத்தின் சிந்தனையில் இருந்து இம்மியளவும் விடுபடவில்லை என்பதை மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

சிறிலங்காவின் அரசியல் அமைப்பு வரையப்பட்ட போது, பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்களவர் ஒருவர் ஜனாதிபதியாத தெரிவாகும் வேளையில், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் ஒருவர் உப ஜனாதிபதியாக வருவதற்கு வாய்ப்பு ஏற்படும் வகையில் அரசியல் அமைப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதிகாரத்திலிருந்தோர், இதை கருத்திற் கொள்ளவில்லை. அதேவேளை, அவ்வாறானதொரு சர்ச்சை எப்பொழுதுமே ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அப்பதவியையே உருவாக்காமல் விட்டுவிட்டார்கள். அதுதான் இல்லாவிட்டாலும் சிறுபான்மை இனத்தவர் ஒருவர் பிரதம மந்திரியாக வருவதற்கோ, குறைந்தது உதவிப் பிரதம மந்திரியாக வருவதற்கோ வாய்பை ஏற்படுத்துமாப் போல் கூட அவர்கள் நடந்து கொள்ளவில்லை.

இதேவேளை, எதிர்கட்சித் தலைவராக அதுவும், அதிர்ஷ்டவசமாக 1977இல் ஒரு தமிழர் வந்தபொழுது அதனைப் பொறுக்க முடியாது அவர்களை வெளியேற்றவும் நடவடிக்கை எடுத்தார்கள். இந்நிலையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கென அமைக்கப்படும் பிராந்திய சபையில் முதலமைச்சர் வருடத்திற்கு ஒருவர் என இரு மாகாணங்களின் நிறைவேற்று மந்திரிகள் மாறி மாறி நியமனம் பெறுவது என்பது நரித்தனமானதொரு திட்டமாகும்.

அதாவது, சிங்களப் பேரினவாத சக்திகள் முஸ்லிம்களுடன் கூட்டுச்சேர்ந்து கிழக்கில் நிரந்தரமாக மாகாணசபையைக்கட்டுப்பாட்டில்வைத்திருப்பதற்கு முற்படுவதோடு, கிழக்கின் நிறைவேற்று மந்திரிப்பதவியை மாறி மாறி - சிங்களவரும், முஸ்லிம்களும்-வைத்திருக்கவும், அதன் மூலம் கிழக்கை தமது பூரண ஆதிக்கத்தில் கொண்டுவரவும் முற்பட்டுள்ளன. இதேவேளை ஒன்றுவிட்ட வருடம் வடக்கிலும் முழுமையான ஆதிக்கம் செய்யவும் இத்திட்டம் வழி ஏற்படுத்துகிறது

இத் திட்டம் நடைமுறை படுத்தப்படுமானால் வடக்கு-கிழக்கு பிராந்திய சபையின் முதலமைச்சராக ஒன்று விட்ட வருடங்களில் ஒரு சிங்களவரோ, முஸ்லிமோ வருவதன் மூலம் தமிழர் தாயகம் முழுவதும் தமது அதிகாரத்தை சிங்களப் பேரினவாதம் செலுத்த முடியும்.

அதாவது, மத்தியில் எதுவித ஆட்சி அதிகாரங்களையும் சிறுபான்மையினருக்கு அளிக்க முற்படாத சிங்கள அரசாங்கம் தமிழர்தாயகத்தில் சிறுபான்மையினரின் உரிமை என்ற ரீதியில் சிங்கள குடியேற்றவாசிகளினதும் முஸ்லிம்களினதும் ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்ட முற்படுகின்றது இதன் மூலம் பேரினவாதத்தின் பிடியை மேலும் இறுக்க முற்படுகிறது.

---

பட்சத்தில் ஏனைய அரசு கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவுப்படி கொடுக்கவேண்டும் அதனால், துறைமுகங்கள் அதிகாரசபை, அதன் ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி வழங்குவதை அரசு விரும்பவில்லை என்று நிதி அமைச்சின் செயலாளர் எஸ். பாஸ்கரலிங்கம் கூறினார்

துறைமுகங்கள் அதிகார சபை ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி வழங்குவது தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளருடன் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் (சீ எம் யூ) பொதுச் செயலாளர் பாலா தம்புவின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று இதனைத் தெரிவிக்கின்றது.

வாழ்க்கைச் செலவுப் படி வழங்குவது அரச தொழில் அமைப்பின் நிதி நிலை மற்றும் அரசின் கொள்கையிலும் தங்கியுள்ளது என்றும் நிதி அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் தெரிவித்துள்ளார்.

அடுத்த தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் கூடி முடிவெடுக்கவுள்ளனர்

பொலிசார் நடவடிக்கை எடுப்பர் எனவும் ஏற்கனவே இவ்வாறான இரண்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் மீது விசாரணை நடாத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிங்கப்பூர், தாய்வான், யப்பான், மலேசியா ஆகிய நாடுகளில் சிறிலங்காவைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் எதுவும் இல்லையெனவும் தொழில் அமைச்சின் செயலாளர் ஜெபசிங்க மேலும் தெரிவித்தார்.

வல்லவையூரான், கே. எஸ். ஆனந்தன், கருணாகரன், முத்துவிஜயராகவன், செம்பியன் செல்வன், கி. சிவஞானம் ஆகியோரின் சிறுகதைகளும், சு. மகேந்திரன் மொழிபெயர்த்த சீனமொழிச் சிறுகதை ஒன்றும் புதுவை இரத்தின ரையும் இன்னும் பல விடயங்களும் இந்தச் சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன.

## ரெயில்வே ஓய்வூதியம்

இலங்கை வங்கி யாழ்ப்பாணம் 2-ம் கிளையில் (ஸ்ரான்லி வீதி) புகையிரத திணைக்கள ஓய்வூதியக்காரர்களுக்கான கொடுப்பனவு திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

## கதை - கண்ணீர் கவிதை நூல்வெளியீடு

கவிஞர் நாவண்ணனின் கதை கண்ணீர் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் கம்பன் தமிழ்க் கோட்டத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் கவிஞர் சோ பத்மநாதன், கலாநிதி காரை. சுந்தரம்பிள்ளை, அருட்திரு செல்வரட்ணம் ஆகியோர் நூலின் ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

---

# அமைச்சர் சங்கர் ஆனந் ராஜினாமா செய்யலாம்

இந்தியாவில் நடந்து வரும் பங்குச் சந்தை ஊழல் விசாரணைகள் தொடர்பாக மத்திய அமைச்சர் சங்கர் ஆனந் ராஜினாமாச் செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பங்குச் சந்தை ஊழல் வெளியான பிறகு, பங்குச் சந்தை ஊழலை விசாரித்து வரும் பாராளுமன்றக் குழு பங்குச் சந்தையில் முதலீடு செய்ய வேண்டாம் என்று பணித்திருந்தது. இந்தப் பணிப்புரையைப் பொருட்படுத்தாமல் அமைச்சர் சங்கர் ஆனந் அனுமதித்ததின் பேரில் 100 மில்லியன் பவுன் பங்குகள் முதலீடு நடந்திருப்பது விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

அமைச்சர் சங்கர் ஆனந் இது தொடர்பாகப் பாராளுமன்ற விசாரணைக் குழு முன் ஆஜராக வேண்டியிருக்கும் ராஜினாமாச் செய்யக் கூட வேண்டிவரும் என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள். மத்திய அமைச்சர் சிதம்பரம் முன்னர் இது போல் ராஜினாமாச் செய்ததை இவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

# அணுகுண்டு பரிசோதனை ரஷ்யாவில் நடைபெறும்

(மொஸ்கோ)

அடுத்த ஆண்டு நடுப்பகுதியிலிருந்து அணுகுண்டுப் பரிசோதனைகளை மேற்கொள்ள ரஷ்யா எண்ணியுள்ளதாக ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் பவல் கிரசெவ் தெரிவித்துள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அணுகுண்டுப் பரிசோதனைகள் நடத்தப்படுமெனவும் ஒரு வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் அணுகுண்டுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென தான் ரஷ்ய ஜனாதிபதியிடம் கேட்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### தூத்துக்குடி மீன்பிடித்துறையில்

# 56 படகுகள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன

(சென்னை)

தூத்துக் குடியில் மீன்பிடித் துறைமுகப் பகுதியில் கட்டுப்பாடுகளை மீறியதாக கூறப்பட்டு ஐம்பத்தாறு மீன்பிடிக்கான இயந்திரப் படகுகளை தமிழ்நாடு மீன்வளத் துறை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

காலை ஐந்து மணி முதல் இரவு ஒன்பது மணிவரை மட்டுமே மீன்பிடிக்க வேண்டுமென்ற இயந்திரப் படகுகளுக்கான ஒழுங்கு விதியை இவை மீறியதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# எகிப்தில் நிலநடுக்கம்? மக்கள் வெளியேற்றம்

(கெய்ரோ)

எகிப்திய தலைநகர் கெய்ரோவில் நிகழ்ந்த நில நடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நானூறுக்கும் அதிகமாகியுள்ளது.

இதேவேளை மேலும் நில நடுக்கம் ஏற்படலாம் என்ற அச்சத்தால் ஆயிரக்கணக்கானோர் கெய்ரோவில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்திருக்கலாம் என்றும் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் காணாமற் போயிருக்கலாம் என்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

# வருடம் பத்தாயிரம் பேர் மலேரியா நோயினால் பலி

## - உலக சுகாதார தாபனம் தகவல்

(நியூயோர்க்)

சுகாதார விஞ்ஞானத்தில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் ஒவ்வொரு வருடமும் உலகில் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மலேரியா நோய்க்குப் பலியாகி வருகின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களில் இருந்து தெரிவிக்கப் படுகிறது

இந்நோயினால் 30 வினாடிக்கு ஒருவர் உயிரிழக்கின்றனர் என்றும் உலக சனத்தொகையில் 40 சதவீதமானோரை இன்று மலேரியா பாதிக்கிறது. மலேரியாவினால் இறக்கும் பத்து இலட்சம் பேரில் சுமார் எட்டு இலட்சம் பேர் ஐந்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளாவர். அத்துடன் ஒவ்வொரு வருடமும் சுமார் பத்து இலட்சம் பேர் மலேரியா நோயினால் பீடிக்கப்படுகின்றனர்.

இந்தியா, பிறேசில், ஆப்கானிஸ்தான், இலங்கை, தய்லாந்து, இந்தோனேஷியா, வியட்னாம். கம்போடியா, சீனா ஆகிய ஒன்பது நாடுகளிலும் மலேரியா நோய் குறைந்து காணப்படுகிறது என்பதையும் அந்தப் புள்ளிவிபரங்களில் இருந்து தெரிகிறது.

ஆபிரிக்க தெற்கு சகாரா நாடுகளில் மலேரியாவினால் பீடிக்கப்படுவர்களில் 80 சதவீதமானோர் இறக்கின்றனர் எனவும் இப் பிராந்தியத்துக்கு வெளியே உள்ள நாடுகளில் ஐம்பது இலட்சம் பேர் மலேரியா நோயினால் பீடிக்கப் படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 26, 27, ஆம் திகதிகளில் மலேரியா பற்றிய, அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடொன்றை உலக சுகாதார ஸ்தாபனம் ஆம்ஸ்டர்டாமிலில் நடத்த உள்ளது.

# லண்டனில் குண்டுவெடிப்புகள்

(லண்டன்)

லண்டன் முழுவதிலும் கடந்த சில தினங்களுக்குள் மட்டும் எட்டுத் தடவைகள் குண்டு வெடிப்புகள் இடம் பெற்றுள்ளன என்றும், இவற்றில் பன்னிரண்டுக்கும் அதிகமானோர் காயமடைந்ததோடு 31 வயதுடைய இளைஞர் ஒருவர் பலியாகியுமுள்ளார்.

லண்டனில் தொடர்ச்சியாக மேலும் பல குண்டுகளை வெடிக்க வைக்க ஐரிஷ் குடியரசு இராணுவத்தினர் திட்டமிட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

# தேர்தலில் விகிதாசாரமுறை பின்பற்றப்பட வேண்டும்

### - சேடப்பட்டி முத்தையா

தேர்தல்களில் விகிதாசார முறை பின்பற்றப்பட வேண்டுமென்று தமிழக சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா கூறியுள்ளார்

பஹாமாஸில் நடைபெறும் பொது நல நாடுகளின் சபாநாயகர்கள் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில்; சிறுபான்மை பலத்துடன் அரசுகள் பதவிக்கு வருவதும் அரசியலில் ஸ்திரத்தன்மை இல்லாத நிலைமை ஏற்படுவதும் இதன் மூலம் தவிர்க்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# ஈரான் தலை நிமிர்ந்து நிற்க இராணுவ அமைப்பு தேவை

[தெஹிரான்]

ஈரான் தலைநிமிர்ந்து நிற்பதற்கு பலத்த இராணுவ பாதுகாப்பு அமைப்பு தேவைப்படுறது பிராந்திய கருத்து வேறுபாடுகளுக்கு பேச்சுவார்த்தைகளின் மூலமே தீர்த்து கொள்ள விரும்புகிறது என ஈரான் ஜனாதிபதி அலிஅக்பர் ஹாஷமி ரப்சன் ஜானி தெரிவித்தார்.

இராணுவ பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் வீரர்களிடையே பேசியஈரான் ஜனாதிபதி ரப்சன் ஜானி ஈரான் குடியரசு போர் விரும்பியல்ல மோதல்களையும் ஆதரவின்மையையும் ஆதரிக்கவில்லை எனினும் இன்றைய உலகில் ஈரானின் பாதுகாப்பு பலமாக இருக்கவேண்டும் இராணுவ பாதுகாப்பு இல்லாவிட்டால் மிதிபட வேண்டிய நிலையே ஏற்படும் எனத்தெரிவித்தார்.

மேலும் சவூதி அரேபியாவுக்கும் கடாருக்கும் இடையே கடந்தவாரம் ஏற்பட்ட எல்லைத் தகராறினை அடுத்து ஜெத்தாவில் சவூதி மன்னர் பஹ்துக்கு ஈரான் ஜனாதிபதி அனுப்பிய செய்தியில் பிராந்திய பிரச்சினைகளை ஈரான் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ள விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

# ஈழநாதம்

# அகதி மாணவர் நிலை கண்டு அவுஸ்திரேலிய தூதுவர் வருத்தம்

நாவற்குடா அகதி மாணவர்களின் பரிதாப நிலைமை தன்னைப் பெரிதும் பாதித்து விட்டதாகவும் இதனையிட்டு தான் பெரிதும் வேதனைப்படுவதாகவும் மட்டக்களப்புக்கு கடந்த செய்வாய்க்கிழமை விஜயம் செய்த அவுஸ்திரேலியாவிற்கான உயர்ஸ்தானிகர் கொவார்ட் டெகென் தெரிவித்தார்.

தனது பாரியாருடன் அம்பாறை ஊடாக மட்டுநகரை வந்தடைந்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அரசாங்க அதிபருடன் நாவற்குடா அகதி முகாமைப் பார்வையிடச் சென்றார்.

பெருமளவுசிறுவர்கள் அகதி முகாமில் நிற்பதைப் பார்த்த அவர்;

'இவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லையா' என அதிகாரிகளிடம் வினாவினார்.

'அகதி முகாமில் இருந்தே அவர்கள் பாடசாலைக்குச் செல்வதாக' உயர்ஸ்தானிகரிடம் அதிகாரிகள் கூறினர்.

ஒரு சிறுவன் அங்கே கிழிந்த உடையுடன் நிற்பதைக்கண்ட அவர் சிறுவனை அணுகி 'நீ என்ன செய்கிறாய் ஏன் இப்படியான ஆடை அணிந்திருக்கிறாய்?' என்று அதிகாரிகளின் உதவி கொண்டு கேட்டார்.

''நான் பாடசாலை செல்கிறேன். பாடசாலைக்கும் இதே உடைதான். என்னிடம் வேறு உடை கிடையாது'' என சிறுவன் கூறவே உயர்ஸ்தானிகர் நெகிழ்ந்து போனார்

அரசாங்க அதிபரைப் பார்த்து ''இம் மாணவர்களுக்கு உடை வழங்க முடியாதா?'' என வினாவினார்.

'உணவு நிவாரணம் மட்டுமே வழங்கப்படுகிறது' என்று அப்போது அதிகாரிகள் பதிலளித்தனர்.

அதன் பின்னர் அவுஸ்திரேலிய அரசுடன் தொடர்பு கொண்டு அகதி மாணவர்களுக்கு உடை வழங்க ஏற்பாடு செய்வதாக அவர் உறுதியளித்தார்.

'உங்களின் வேறு தேவைகள் என்ன? என்றும் அங்கு நின்ற மாணவர்களைப் பார்த்துக் கேட்டார்.

'எங்களுக்கு புத்தகம் மாத்திரமே இலவசமாகக் கிடைக்கிறது' என மாணவர்கள் கூறினர்.

உடனடியாக அரசாங்க அதிபரின் காரில் ஏறிய உயர்ஸ்தானிகர் மட்டக்களப்பு நகருக்கு வந்து தனது சொந்தப் பணத்தில் சுமார் 10,000 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள், பென்சில்கள் போன்ற பல்வேறு பொருள்களை வாங்கி மீண்டும் அகதி முகாமுக்குச் சென்று கையளித்தார். அகதி மாணவர்களின் பரிதாப நிலைமை தன்னைப்

பாடசாலையின் அவலம்

## மழை தொடங்கினால் வீட்டுக்கு ஓடும் மாணவர்

[வவுனியா[

வவுனியா கல்வித்திணைக்கள அதிகாரிகளின் புறக்கணிப்பினால் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலை ஒன்று கைவிடப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

பூம்புகார் என்ற கிராமத்தில் ஓலைக் கொட்டிலாலான பாடசாலை பாழடைந்திருப்பதால் மாணவர்கள் மரங்களின் கீழே தங்கியே பாடம் படிக்கிறார்கள். தற்போது மழைகாலம் தொடங்கி விட்டதால்மாணவர்கள் பாடசாலை நேரத்தில் மழையில் நனையாமல் இருப்பதற்காக தங்கள் வீடுகளை நோக்கி ஓட்டம் பிடிக்கிறார்கள்.

நூற்றி இருபது மாணவர்கள் கல்விபயிலும் இப் பாடசாலையில் இரு ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிகிறார்கள்.

வவுனியா கல்வித் திணைக்களத்தால் இப் பாடசாலைக்கென இரு கரும்பலகைகளும், நான்கு தினவரவு புத்தகங்களும் மிகக் குறைந்தளவிலான இலவசப் பாடப் புத்தகங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன வாம்.

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மலையக குடும்பங்கள் குடியேறியுள்ள பகுதி இக்கிராமமாகும். [தி]

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாவதி சிவஞானசுந்தரம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பத்மாவதி சிவஞானசுந்தரம் 16-10-1992இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை நாகரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ் சென்ற சிவஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும், நளாயினி (கனடா), தயாளன் (சுவிஸ்), நித்தியானந்தன் (ஜேர்மனி) கிருபானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்ற குணநாயகம், பத்மநாதன் (கனடா), இராசேந்திரம், நாகேந்திரம் காலஞ்சென்ற கதிர்காமநாதன் ஆகியோரின் சகோதரியும், பாலகுமாரன் (கனடா) சகுந்தலாதேவி (ஜேர்மனி), சத்தியபாமா (சுவிஸ்) அகியோரின் அன்புமாமியும், கதிர், கார்த்திகா நிருபன், நிதர்சனா, பிரதீபன் ஆகியோரின் பேர்த்தியும் அவரார்.

## பயிற்சிப் பாசறை

புன்தர் சாலீஸ் மகாவித்தியாலய சாரணரும் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலய சாரணரும் இணைந்து நடத்தும் யாழ். போறி முன்னோடிப் பயிற்சிப் பாசறை 17-ம், 18-ம் திகதிகளில் புனிதஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

## விளாத்திக் குளம் புனரமைப்பு

(வவுனியா)

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவையொட்டி பண்டைக்கால புராதன குளமான விளாத்திக் குளத்தின் கணிசமான பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக வவுனியாக் கோட்டத்தினால் புனரமைக்கப்பட்டுள்ளது

இக் குளத்தின் கீழ் உள்ள மொத்தக்காணி 100 ஏக்கர் ஆகும். இச் சிரமதான வேலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரும் முத்துமாரி நகர், புதூர்ச்சந்தி மக்களும் இணைந்து செயல்பட்டுள்ளனர்.

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்டபாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று;

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் மாலை 3-00மணிக்கு 17வயது பிரிவில் யாழ். மத்தியகல்லூரி எதிர் கரவெட்டி விக்கினேஸ்வரா மாலை 4-00 மணிக்கு 17 வயது பிரிவில் புனித சார்ள்ஸ் எதிர் ஹாட்லிக் கல்லூரி

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மைதானத்தில் 17 வயது பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 19வயது பிரிவில் வரணி மகாவித்தியாலயம் எதிர் ஹாட்லிக்கல்லூரி

## 'சுவடுகள்' நூல் வெளியீடு

இயல்வாணன் எழுதிய ''சுவடுகள்'' நூல் வெளியீட்டு விழா நாளை காலை 10 மணிக்கு பல்கலைக்கழககைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நூலை நிதர்சனம் பொறுப்பாளர் திரு. இ. பரதன் அவர்கள் வெளியிட்டு வைத்து உரையாற்றுவார். நூலின் முதற்பிரதியை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அவர்கள்பெற்றுக்கொள்வார்.

திரு.செக்கலிங்கம் தலைமை

# ஆயுதங்களுடன் செல்வதை கண்டும் தகவல் தரவில்லை

## இளைஞர்மீது குற்றச்சாட்டு

[கொழும்பு]

திருக்கோணமலையில் பள்ளிக்குடியிருப்பில் ஆயுதங்களுடன் இருவர் சென்றதைக் கண்டும் தகவல் கொடுக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவருக்கு நீதிமன்றம் கலையும்வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

க. பொ. த. உயர்தரவகுப்பு மாணவரான வைரமுத்து கோணேஸ்வரன் [வயது 19] என்பவருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது.

1 - 1 - 90 க்கும் 7 - 11 - 90 க்கும் இடைப்பட்ட காலத்தில் மணியம், சிவம் ஆகியோர் திருமலை பள்ளிக்குடியிருப்பில் ஆயுதங்களுடன் போவதைப் பார்த்தும் தகவல் கொடுக்க தவறினார் என்பதே இவர் மீதுள்ள குற்றச்சாட்டாகும்.

இவர் 23 மாதகாலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தசாலும்முன்னர்இவர் குற்றம் எதுவும் புரிந்திராமையாலும் குறைந்தபட்ச தண்டனை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கிழக்கிற்கு

எனத் தெரிவிப்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது. மேலும் 19 படையினரும் இச் சம்பவத்தில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களும் தமிழர்களும் கலந்து வாழும் பகுதிகளிலும் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிராந்திய

தெரிவித்தார்

இதேவேளை மேஜர் ஜெனரல் கொப்பேக்கடுவவின் மரணத்துக்குப் பிறகு வடபகுதித் தளபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவுக்குப் புதிய பொறுப்பு வழங்கப்படவுள்ளது இராணுவத்தின் சீவ் ஒவ் ஸ்ராவ் பதவியைப் பொறுப்பேற்க இவர் அண்மையில் கொழும்பு செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை தற்போது யாழ் பிரதேச இராணுவத் தளபதியாகக் கடமையாற்றி வரும் பிரிகேடியர் றோகன் தலுவத்த வடபகுதி இராணுவத் தளபதிப் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது

வடக்கு-கிழக்கு யுத்தமுனைக்கு வெளியில் கடமையிலீடுபட்டிருக்கும் எந்த இராணுவ அதிகாரியும் வடக்கில் இராவக் கட்டுப்பாட்டு அமைப்பில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படமாட்டார்கள் என்று இராணுவத் தலைமைப்பீட வட்டாரங்கள் கூறுகின்றன.

இப்போது வட பகுதியில் பிரதான இராணுவ முகாம் ஒன்றிற்குப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிவரும் பிரிகேடியர் கெமுனு குலத்

பொலநறுவை

இராணுவத்துக்குக் கீழ் இயங்கும் முஸ்லிம் ஊர்காவற் படையினருக்கு முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு தேவையான ஆயுதங்களை அரசு வழங்கவில்லை என்றும் அபுகலாம் குறை கூறினார்.

கோரிக்கையை

ரப் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சிறிலங்கா அரசு தனது கடமையைச் செய்யத் தவறினால் ஆயுதம் ஏந்தும் உரிமையும், சுதந்திரமும் தமக்கு உண்டு என்று முஸ்லிம் காங்கிரஸ் தமதுஅறிக்கைஒன்றில் அரசை எச்சரித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஊர்காவற் படையைச் சேர்ந்தவர்கள், தமக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு தமிழர்களைத் தாக்கிக் கொன்றார்கள் என்ற குற்றச் சாட்டுக்கு முஸ்லிம்கள் பொறுப்பில்லை என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் மேலும் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தவறிவிட்டது என்பதால் அரசுக்கான ஆதரவை மீளப் பெறுவது பற்றி முஸ்லிம் காங்கிரஸ் ஆலோசனை நடத்தும்என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கலை விழா

நல்லூர்இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை [மங்கையற்கரசி] யின் நிதி உதவிக்காக கல்லூரி பழைய மாணவர்களால் இன்று மாலை 5.00 மணிக்கு கல்லூரிவிளையாட்டு மைதானத்தில் கலைவிழா இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் ''பண்டாரவன்னியன்'' நாடகம் இடம் பெறவுள்ளது.நாட்டிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பணத்தை வைப்பில் ஏற்காமை தொடர்பாக மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளருடன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் நடாத்தும் சந்திப்பு இன்று காலை 9-00 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். இதில் சகல கூட்டுறவுச் சங்கத் தலைவர்களையும், பொது முகாமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேற்படி கூட்டுறவுச் சபை அறிவித்தல் விடுத்துள்ளது. (22)

பதவி உயர்வு

டும் எனக் கல்விச்சேவைகள் ஆணைக்குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கஷ்டப்பிரதேசங்களில் இரண்டுஆண்டுகளுக்கு மேல் நிறைவேற்று அதிபர்களாகச் சேவைசெய்பவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### முருகேசு பொன்னம்பலம்

(கணக்காளர், தமிழ்மதி நகைமாடம்)

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 125/47 ஆனந்தன் வடலிவீதி, அரியாலையை தற்போது வசிப்பிடமாகக்கொண்டவருமான முருகேசு பொன்னம்பலம் (கணக்காளர், தமிழ்மதி நகைமாடம்)காலமானார். இவர்காலஞ்சென்றமுருகேசு தங்கமுத்துவின் புதல்வரும், காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை தங்கமுத்துவின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும், வசந்தராசா, சண்முகராசா, கண்ணதாசன் சுகந்தினி, வதனி, தர்சினி, வீரகேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற மார்க்கண்டு, தாமோதரம்பிள்ளை, நாகம்மா,

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாவதி சிவஞானசுந்தரம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பத்மாவதி சிவஞானசுந்தரம் 16-10-1992இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை நாகரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ் சென்ற சிவஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும், நளாயினி (கனடா), தயாளன் (சுவிஸ்), நித்தியானந்தன் (ஜேர்மனி) கிருபானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்ற குணநாயகம், பத்மநாதன் (கனடா), இராசேந்திரம், நாகேந்திரம் காலஞ்சென்ற கதிர்காமநாதன் ஆகியோரின் சகோதரியும், பாலகுமாரன் (கனடா) சகுந்தலாதேவி (ஜேர்மனி), சத்தியபாமா (சுவிஸ்) அகியோரின் அன்புமாமியும், கதிர், கார்த்திகா நிருபன், நிதர்சனா, பிரதீபன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அச்சுவேலி வடக்கு அவரின் இல்லத்தில் 17-10-92 இன்று 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை மயானத்துக்கு எடுத்து செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. யோகநாதன்
(மருமகன்)

''லச்சுமி வாசா''
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(3482)

# 31-ம் அந்தியேட்டி நினைவு நாள்

மண்ணில்: 19 — 03 — 1943



விண்ணில்: 18 — 09 — 1992

## சிவகுரு சண்முகநாதன் (இனியவன்)

(தேத்தாவடி சாவகச்சேரி)

நீண்டதோர் காவியத்தைத் தொடக்கியே இடைநடுவில்
நிம்மதி கொண்டு நீரும் சென்றது முறையோ
ஆண்டுகள் பலவாய் ஆனாலும் எம் கனவுகள்
அணையாத தீபமாய் என்றும் ஒளி வீசும்.

சகோதரர்கள்:
சி. வேலாயுதம்
சி. வெற்றிவேல்
சி. கார்த்திகேசு

அன்பு மனைவி:
இராஜி சண்முகநாதன்

பிள்ளைகள்:
தமிழினி சுதந்திரன்
யாழினி - கலைமகள்

உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் 18-10-92 நண்பகல் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

(3351)

—குடும்பத்தினர்.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கொண்டு அகதி மாணவர்களுக்கு உடை வழங்க ஏற்பாடு செய்வதாக அவர் உறுதியளித்தார்.

'உங்களின் வேறு தேவைகள் என்ன? என்றும் அங்கு நின்ற மாணவர்களைப் பார்த்துக் கேட்டார்.

'எங்களுக்கு புத்தகம் மாத்திரமே இலவசமாகக் கிடைக்கிறது' என மாணவர்கள் கூறினர்.

உடனடியாக அரசாங்க அதிபரின் காரில் ஏறிய உயர் ஸ்தானிகர் மட்டக்களப்பு நகருக்கு வந்து தனது சொந்தப் பணத்தில் சுமார் 10,000 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள், பென்சில்கள் போன்ற பல்வேறு பொருள்களை வாங்கி மீண்டும் அகதி முகாமுக்குச் சென்று கையளித்தார். அகதி மாணவர்களின் பரிதாப நிலைமை தன்னைப் பெரிதும் பாதித்து விட்டதாகவும் இதையிட்டு வேதனைப் படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத்தகவல்களை கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ்ப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருந்தது.

17 வயது பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 19வயது பிரிவில் வரணி மகாவித்தியாலயம் எதிர் ஹாட்லிக்கல்லூரி

### 'சுவடுகள்' நூல் வெளியீடு

இயல்வாணன் எழுதிய ''சுவடுகள்'' நூல் வெளியீட்டு விழா நாளை காலை 10 மணிக்கு பல்கலைக்கழககைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நாலை நிதர்சனம் பொறுப்பாளர் திரு. இ. பரதன் அவர்கள் வெளியிட்டு வைத்து உரையாற்றுவார். நூலின் முதற்பிரதியை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அவர்கள்பெற்றுக்கொள்வார்.

திரு.செக்கலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் ஆய்வுரைகளை செம்பியன் செல்வன், சாந்தன் ஆகியோர் நிகழ்த்துவர். தொடர்ந்து, ''எம் விழிச் சுவடுகள்'' எனும் கவி அனுபவ வெளிப்பாட்டு நிகழ்ச்சியும் இடம் பெறும்.

# மகசீன் சிறையில் இருந்து 31 பேர் விடுதலை

(வவுனியா)

வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களைகொண்டு சென்றதாக கைது செய்யப்பட்டு மகசீன் சிறைச்சாலையில் மூன்று மாதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 31 பேர் கடந்தபுதன்கிழமை வவுனியா நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

ஈரற்பெரியகுளம், லொறிகள் சோதனை தடைமுகாம்தாண்டிக்குளம் தடைமுகாம் ஆகியவற்றினூடாக தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு சென்றதாக குற்றஞ் சாட்டப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# கண்ணீர் அஞ்சலி

தமிழ்மதி நகைமாட கணக்காளர்

## திரு. முருகேசு பொன்னம்பலம் அவர்கள்

காலமானார் அவரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்மதி நகைமாடம்; யாழ்ப்பாணம்
வான்மதி நகைமாடம்; யாழ்ப்பாணம்
அழகுநிலா நகைமாடம்; யாழ்ப்பாணம்
தமிழ்நிலா நகைமாடம்; நெல்லியடி
தமிழ்ப்பரிதி நகைமாடம்; சாவகச்சேரி

(3484)

கிறது.

இதேவேளை தற்போது யாழ் பிரதேச இராணுவத் தளபதியாகக் கடமையாற்றி வரும் பிரிகேடியர் றோகன் தளுவத்த வடபகுதி இராணுவத் தளபதிப் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது

வடக்கு-கிழக்கு யுத்தமுனைக்கு வெளியில் கடமையிலீடுபட்டிருக்கும் எந்த இராணுவ அதிகாரியும் வடக்கில் இராவக் கட்டுப்பாட்டு அமைப்பில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படமாட்டார்கள் என்று இராணுவத்தலைமைப்பீட வட்டாரங்கள் கூறுகின்றன.

இப்போது வட பகுதியில் பிரதான இராணுவ முகாம் ஒன்றிற்குப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிவரும் பிரிகேடியர் கெமுனு குலத்துங்க பிரிகேடியர் தளுவத்தவின் பதவி உயர்வால் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தைநிரப்பும் வகையில் யாழ் பிரதேசத் தளபதியாக நியமிக்கப்படவுள்ளார்.

### ஆசிரியர்

சத்தை நீக்கும் வகையில் 92 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

### க. பொ. த.

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

### பனம்

உடனடியாக சீனியாகவோ அல்லது வெல்லமாகவோ உற்பத்தி செய்து மக்களின் அத்தியாவசிய சீனித் தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்து உதவும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்

### இனப்பிரச்சினை

இடையில் மாற்றப்படும்.

மாகாண சபைகள் ஒவ்வொன்றும் தனித்துச் சுயமாகச் செயற்பட முடியும். ஆனால் இரு மாகாணங்களுக்கும் பொதுவான விவகாரங்களில் இரு மாகாணங்களும் ஒன்று சேர்ந்து பிராந்திய சபையாக முதலமைச்சரின்கீழ் செயற்படலாம்.

மாகாணசபைகளுக்குத்தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். பிராந்திய சபையின் உறுப்பினர்களாக இந்த இரு மாகாணசபைகளின் உறுப்பினர்களே இருந்து வருவார்கள். இரு சபைகளுக்கும் ஒரே ஆளுநரே இருந்து வருவார் எனவும் தெரியவருகின்றது.

ஆதரவை மீளப் பெறுவது பற்றி முஸ்லிம் காங்கிரஸ் ஆலோசனை நடத்தும்என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேல் நிறைவேற்று அதிபர்களாகச் சேவைசெய்பவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## முருகேசு பொன்னம்பலம்


(கணக்காளர், தமிழ்மதி நகைமாடம்)

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 125/47 ஆனந்தன் வடலிவீதி, அரியாலையை தற்போது வசிப்பிடமாகக்கொண்டவருமான முருகேசு பொன்னம்பலம் (கணக்காளர், தமிழ்மதி நகைமாடம்) காலமானார். இவர்காலஞ்சென்றமுருகேசு தங்கமுத்துவின் புதல்வரும், காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை தங்கமுத்துவின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும், வசந்தராசா, சண்முகராசா, கண்ணதாசன் சுகந்தினி, வதனி, தர்சினி, வீரகேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற மார்க்கண்டு, தாமோதரம்பிள்ளை, நாகம்மா, காலஞ்சென்ற செல்லமுத்து சிவக்கொழுந்து காலஞ்சென்ற இராசம்மா, கமலவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, காலஞ்சென்ற மயில்வாகனம் கனகரட்ணம், காலஞ்சென்ற கமலாம்பிகை, மனோன்மணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

125 / 47 ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை.

தகவல்
மகன்
சண்முகதாசன்

(3483)



(சி-5232)

# உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 16-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இல. 6144

வட பகுதிக்கு உள்ளே வந்தது

25-3757, 37-3969, 27-557 24-3072, 25-7135, 24-3262, 24-5437.

வட பகுதிக்கு வெளியே சென்றது

42-3089, 27-7274, 26-0767, 26-3741, 41-1799.